**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU ISSN: 2320 - 4842

19-2 April 2025

# தமிழ் - மலையாள நாட்டுப் புறப்பாடல்களில் உள்ளுறை - ஓர் உளவியல் பார்வை

**முனைவர் பிரிதா. செ**
தமிழ்த்துறை, பல்கலைக்கழகக் கல்லூரி
திருவனந்தபுரம்-695 034

***ABSTRACT***

Folk songs reflect cultural heritage, values traditions and social issues of the Society. They offer insights into the collective and individual psyche, reflecting the experience and perspective of a community. Emotional Regulation and Expression is one of the psychological significance of folksongs which emphasize on catharsis Emotional Resonance and Narrative identity. Folk songs cultivate Cultural Transmission and self-identity and deals with cultural values, belongings of specific regions, traditions or social groups, evokes memories and nostalgia insights. The Folk Songs provide psychological insights in understanding the mental states and behaviours of others. As an art form folk songs focus on unravelling the emotional turmoil experienced by rural women. Through folk songs, people alter their mood states, match their current emotions, comfort themselves, relieve stress, meet psychosocial needs, validate their affiliation with a valued group, or celebrate social events or rituals.

## முன்னுரை

நாட்டுப் புற மக்களால் பாடப்படும் பாடல்கள் நாட்டுப்புறப்பாடல்களாகும். நாட்டுப்புற பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வோடு வாழ்வாகப் பின்னிப்பிணைந்துள்ளன. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள நிகழ்வுகள் நாட்டுப்புறப்பாடலின் பொருளாகின்றன. இவ்வரையறை உளவியலுக்கும் பொருந்துவதாகிறது. நாட்டுப்புற இலக்கியப் பாடல்களின் பரிணமித்த நிலையையே சங்க இலக்கியப் பாடல்கள் என்கிறோம். இவ் கருத்தமைவையே ஆய்வாளர்கள் பலரும் நிறுவுகிறார்கள். தமிழ் மலையாள இரு மொழி இணைவைக் கொண்டே நாம் அதனை சகோதர மொழி என்று கூறுகிறோம். சேரநாட்டு புலவர்கள் தமிழ் மொழிக்குப் பல கொடைகளையும் வழங்கினார்கள் என்பதோடு பல தமிழ்க் கலைச்சொல் வடிவங்களையும் தற்போதும் பயன்படுத்துகிறார்கள் என்பதும் வெளிப்பட காணக் கிடைக்கும் சான்றுகள் ஆகும்

## நாட்டுப் புறப்பாடல்களின் அமைப்பும் – உளவியலும்

தொல்காப்பியர் ‘பண்ணத்தி ‘என்ற ஒன்றின் இலக்கணத்தைக் கூறுகிறார். அதாவது பழம்பாட்டினோடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன என்பது இதன் பொருள். தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி இன்றைய நாட்டுபுற பாடல்களைக் குறிக்கின்றது என்பது சு. சக்திவேலின் கருத்தாகும்

தமிழ் மலையாள நாட்டுப்புற பாடல்களின் பொதுத்தன்மை நெகிழ்ந்த தொடர் அமைப்பைச் சேர்ந்தது (Free Phrase genre) என்பதுடன் இரண்டிற்கும் பாடவேறுபாடும் உண்டு என்பதும் ஆகும்.கெட்டல், யாத்தல், தொடுத்தல் எனும் பாடல் கெட்டு முறையே மலையாளம், கிரிக் போன்ற மொழிகளிலும் காணப்படுகிறது, என்பது ராகவன் பையனரடு என்பவரின் கருத்துமாகும்.இத்தகைய பாடல் கட்டும் முறையாலும் நம் அண்டை மொழி எனும் சிறப்பாலும் தமிழ் – மலையாள நாட்டுப்புறப்பாடல்கள் ஒப்புமைப்படுத்தப் படுகின்றது.. மலையாள மொழியின் பழங்குடிகளால் வழங்கும் பாடல்கள் தமிழிலேயே பாடப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கன. பலவிதமான தொழில்களில்

ஈடுபடுகின்றவர்கள் களைப்பு தோன்றாமல் இருக்கவும், நிம்மதியும் மகிழ்ச்சியும் தோன்ற பாடப்படுவது என்பதும் ஒப்புமையின் வேறு கூறுகளாகும். இத்தகைய இருமொழி இணைவைக் கொண்ட மொழிகளின் இடையே நாட்டுப்புற பாடல்களில் உள்ளுறை அமைப்பு எவ்வாறு அமைகிறது என்பதை கட்டுரை ஆராய்கிறது, என்பதோடு மண்ணின் மைந்தர்தம் மன கருவறையில் நின்று புறப்படும் பாட்டுகளில் உளவியல் எவ்வாறு அமைகிறது என்பதை நோக்கும் போக்கில் இவ்வாய்வு அமைகிறது.

**உளவியலும் உள்ளுறையும்**

உளவியலின்படி மனம் இரண்டு வகைப்படும் அவை

நனவு மனம் (Conscious Mind)

நனவிலி மனம் (Unconscious Mind)

இந்நனவு மனதிற்கும் உள்ளுறைக்கும் இணைவு அல்லது தொடர்பிருப்பதாக உளவியலாளர்கள் கூறுகிறார்கள். அகம் என்பது மனம் (அ) உள்ளம் எனப் பொருள் கொள்ளலாம். இலக்கியமும் உளவியலும் கொண்ட தொடர்பு நிலைகளைச் சுட்டும் பொழுது, இலக்கியம் என்பதற்கு அப்பால் இலக்கியக் கோட்பாடுகள் என்ற நிலையில் தொல்காப்பியரின் உள்ளுறைக் கோட்பாட் டில் ஓரளவு ஃபிராய்டிய இணைவைக் காண முடிகிறது. கலை இலக்கியங்களில் புற உலக பொருள்களின் உள்ளே இச்சை மன உணர்வுகள் நனவிலி நிலையில் ஒளிந்திரு க்கும் என்பது பிராய்டியம். உரிப்பொருள் (இச்சை உணர்ச்சி) தெய்வம் தவிர்த்த ஏனைய புற உலக பொருட்களின் (உணவு, மா, மரம், புள், பறை இன்ன பிற) உள்ளே நனவு நிலையில் / படைப்பாளனின் அறிவு மனதின் முழு ஆதிக்கத்தோடு புகுத்தப் பட்டிருக்கும் என்பது தொல்காப்பி யம். ஃபிராய்டின் மறைபொருளாக்கம் (நனவிலியாக்கம்) இயற்கையானதாகவும் மிக ஆழமானதாகவும் அமைந்திருக்க தொல்கா ப்பியரின் மறைபொருளாக்கம்(நனவு நிலை உள்ளறையாக்கம்) செயற்கையானதாகவும் மேலோட்டமானதாகவும் அமைகிறது என்பது அரங்கநலங்கிள்ளியின் கருத்தாகும். படைப்பாக்கத்தினுள் மறைந்திருக்கும் உண்மையை வெளிக்கொணர்வதற்கு ஒப்பீடு துணைபுரிகிறது. தமிழ்மலையாள நாட்டுப்புற பாடல்களுக்கும் உளவியலுக்குமான தொடர்பு என்பதற்கு மேற்கண்ட சான்றா தாரக் குறிப்பையே சான்றாகக் கொள்ள லாம். சங்க இலக்கியங்களில் முன்னோடி நாட்டுப்புற பாடல்கள் என்பது நாம் அறிந்ததே. நாட்டுப்புறப்பாடல்களின் நாகரீக பண்பட்ட நிலையே சங்கப்பாடல்கள் என்றும் கூறலாம். சங்கப் பாடல்கள் அறக்கழிவு என்று ஒதுக்கியவைகளையே நாட்டுப்புறப்பாடல்கள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. நாட்டுப்புறப்பாடல்களில் சங்கப்பாடல்களை ஒத்த குறிப்பு தோன்ற அமைந்த பாடல்கள் அமைந்துள்ளன.

**உள்ளுறை**

உள்ளுறை என்பதற்கு உட்கருத்து என்பது பொருளாகும். (Hidden Meaning) புதைபொருள் என்றும் கூறலாம். உள்ளுறை உவமம், இறைச்சி ஆகிய இரண்டும் 'புலப்பாட்டு நெறி' என்றும் கொள்ளலாம். அக இலக்கியங்களைப் பாடும் முறைமை என்றும் கொள்ளலாம். புலவன் தான் சொல்லுகின்ற உவமத்தோடு ஒத்துக் கூறக் கருதிய பொருள் வந்து முடியுமாறு அமைந்திருப்பது உள்ளுறை உவமம். புலப்பாடு – வெளிப்பாடு என்றும் விளக்கலாம். உள்ளுறையை தமிழண்ணல் பார்வையில் விளங்கிக் கொள்வது சிறந்தது.

தொல்காப்பியர் உள்ளுறை என ஒரு பொருளை எடுத்தோதுகின்றார். அதன் உட்பிரிவுகளுள் ஒன்றே உள்ளுறை உவமை ஆகும். தொல்காப்பியம் கூறும் உள்ளுறை, உள்ளுறை உவமம் குறித்த வரையறைகள் உள்ளுறையைப் விளங்கிக் கொள்ள உதவுகின்றன.

உள்ளுறை என்பது வெளிப்படையாகத் தோன்றும் ஒரு பொருள் இருக்கவும் உட்பொருளாகப் பிறிதொன்று தோன்றும். (தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு ப.66) இவ்வாறு சொல்லப்படும் செய்தியின் மூலம் வேறு ஒன்றை உணர்த்துவது உள்ளுறை என்பது தெளிவாகும். தொல்காப்பியர் திணையைக் கண்டறியும் முறைகளை இரண்டாகக் கூறும் இடத்து உள்ளுறை உவமத்தை முன்வைக்கின்றார்.

**'உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்**

**தள்ளா தாகும் திணையுணர் வகையே'.**

(தொல்.பொருள்.நூ.992)

கருப்பொருள்களில் தெய்வம் தவிரப் பிறபொருள்களில் உள்ளுறை பயின்று வரும் என்று தொல்காப்பியர் கூறும் கருத்து கருப்பொருள்களின் வழி உள்ளுறை விளக்கம் பெறும் என்பதைத் தெளிவாக்கு கிறது.

**'உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்**

**கொள்ளும் என்ப குறியறிந் தோரே'.**

(தொல்.பொருள்.நூ.993)

உள்ளுறை உவமம் ஐந்தாகப் பாகுபடுத்தப் பட்டு ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு வகையில் சிறப்புறும் என்பதையும் உள்ளுறையின் பயன் முடிவற்ற இன்பம் என்பதையும் தொல்காப்பியர் விளக்குகிறார். இதனை,

**'உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்**

**கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே'.**

(தொல்.பொருள்.நூ.1188)

உள்ளுறை, உவமையைக் கையாளும் இடம் என்று சுட்டுவார் வ.சுப. மாணிக்கனார். உள்ளுறை உவமம் தமிழ் இலக்கியத்திற்கே உரிய தனிநெறி எனலாம்.தலைவனது இன்ப இழிவுகளை எடுத்துரைப்பதற்கும் இல்லறப் பண்பின்மையைக் குறிப்பினால் உணர்த்துவதற்கும் உள்ளுறைகள் பயன்படுகின்றன உள்ளுறை உவமையை ஆங்கிலத்தில் 'Implied Simile' என்றும் குறிக்கின்றனர்.

**'அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்**

**தன்வயின் வருதலும் வகுத்த பண்பே'.**

(தொல்.பொருள்.நூ.1189)

என்று தொல்காப்பியம் கூறும் உள்ளுறையின் வகைகளான உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்னும் ஐந்தும் பாடுபொருள் சிறக்க உதவும் கூறுகளாக அமைந்திருக்கின்றன. இவற்றுக்குத் தரப்படும் விளக்கம் இலக்கியக் கட்டமைப்பிற்கு இவற்றின் பங்களிப்பை விவரிக்கும்.

உடனுறை–உடனுறைவதொன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள்விளங்குவது. உவமம் – என்பது ஏனை உவமம் என்பதன் வேறுபட்டு உள்ளுறைப் பொருளைத் தருவதாகும். சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருள் தோன்றச் செய்தல். நகை – நகையினால் பிறிதொரு பொருள் உணர நிற்றல். சிறப்பு – இதற்குச் சிறந்தது இஃது எனக்கூறுவதனால் பிறிதொரு பொருள் கொள்ளக்கிடப்பது. (தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு பக்.60-61) இத்துடன் மங்கல மொழி, வைஇய மொழி, மாறில் ஆண்மையில் கூறிய மொழி என்பவற்றிலும் உள்ளுறை பயின்று வரும் என்கிறார் தொல்காப்பியர்.

**'மங்கல மொழியும் வைஇய மொழியும்**

**மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியும்**

**கூறியல் மருங்கின் கொள்ளும் என்ப'**

(தொல்.பொருள்.நூ.1190)

உள்ளுறையின் வகைகளுள் ஒன்றாக அமையும் உவமத்தைக் குறிப்பிடும் தொல்காப்பியர் உவமப் போலி என்னும் ஒன்றைக் குறிப்பிட்டு அதன் வகைகளை ஐந்தாகப் பாகுபாடு செய்கிறார். இதனை,

**'உவமப் போலி ஐந்தென மொழிப.**

(தொல்.பொருள்.நூ.1244)

**தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்**

**வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்**

**பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப'**

(தொல்.பொருள்.நூ.1245)

என்னும் நூற்பாக்களின் வழி அறியலாம். உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்னும் இரண்டைக் குறிப்பிட்டு, உள்ளுறை உவமம் உய்த்துணர்ந்து பொருள் கொள்வது, ஏனை உவமம் இயல்பாகப் பொருள் உணரும் தன்மையது என்பதைத் தொல்காப்பியர் தெளிவுபடுத்துகிறார்.

**'உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள்முடிகென**

**உள்ளுறுத்து இறுவதே உள்ளறை உவமம்**

(தொல்.பொருள்.நூ.994)

**ஏனை உவமம் தான் உணர் வகைத்தே'**

(தொல்.பொருள்.நூ.995)

மேற்குறித்த செய்திகளால் உள்ளுறை என்பது புலவன் தான் படைக்கும் பாடலுக்குள் மறைபொருளாய் ஒன்றைக் கூறி விளங்கச் செய்தல் என்பது விளங்கும்.

உள்ளுறை குறிப்பு தோன்றும் சங்கப்பாடல் ஒன்றில் நாரை பொது நிலத்திலுள்ள பல்வேறு மீன்களையும் பிடித்துத் தின்றுவிட்டு தங்குதல் பொருட்டு நன்செய் நிலமான மருத மரத்தின் உச்சியில் வந்து தங்குதல் போன்று தலைவனானவன் பொழுதெல்லாம் பல்வேறு பரத்தை மகளிரை அடைந்து கூடியிருந்து விட்டு வீட்டிற்கு வருதல் (நற் - 380) போன்றது. இதில் நாரை - தலைவன், பல்வேறு மீன்கள் - பரத்தை. மருதமரம் - தலைவி உள்ளுறையாக அமைகிறார்கள்.

நாட்டுப்புறப் பாடலிலும் தலைவி ஒருத்தி பரத்தையை நாரை என்று குறிப்பிடுகிறாள்

**'நாரை வந்து மீனைத் தொட**

**நைந்ததையா நம்முறவு'**

(வானமாமலை.நாதமிழர் நாட்டுப் பாடல்கள் -ப .226,227)

**'பாடும் குயில் இருக்க**

**பனங்காட்டைத் தேடலாமோ?**

**சித்திரம் போல் நானிருக்க**

தேச வழி போகலாமோ?' (அரவிந்தன் மூ.வை.,தமிழர் நாட்டுப் பாடல்கள்-ப .176)

தலைவன் தலைவியைப் பிரிந்து மரத்தையே நாடிச் சென்ற செய்தியை உணர்த்தும் ஒரு மலைப் புலையர்களின் பாடலில்

'சந்தனம் உரசும் கல்லு

தலைவாசல் சாத்தும் கல்லு

என் மீனரசும் கல்லு கல்லு

நீங்க வீணாசை கொண்டியம்மா

'(வானமாமலை.நா தமிழர் நாட்டுப்பாடல் கள் ப.260)

உள்ளுறை உவமம் தோன்றப் பாடும் மலையாளப்பாடலில்,

'வேங்கை பூக்கவில்லை

ஈச்சிக் கொம்பு காய்க்கவில்லை

என் கன்னி யிளங் கொமர

நீ காய் பறிக்க வராதப்பா'

(சந்திரமோகனன்எஸ்.ஆர்.இடுக்கிஆதிவாசிப் பாட்டுகள்- ப.225)

வேங்கைப் பூக்கும் நிகழ்வுகளும் அதனை ஒட்டிய எதிர்ப்பு எனும் இந்த சிந்தனை தமிழ் மொழி ஊடுருவலினை அடியொற்றி வந்ததாகும் வேங்கை பூ பூக்கவில்லை காய்பறிக்க வரவேண்டாம் எனும் அறிவிப்பின் நோக்கம் இதுதான் நான் இப்போது வீட்டுக்கு விலக்காகி உள்ளேன் என்றும் அதனால் புணர்தலுக்கு வாய்ப்பில்லை என்றும் குறிப்பிடுகிறாள் பாட்டில் உள்குறிப்பு சிறந்த உத்தியாக அமைந்துள்ளது

'ஞான் நடக்கும் சாலிலொரு சம்போத்து

சம்பகத்தின்றே பூ பறிக்கான் பந்த ஞானு

நிக்கணோ போவணோ

இந்நெலயும் மொட்டு இந்நும் மொட்டு

மற்றெ நாளு பந்நெங்கிலு

நல்ல நல்ல பூ பறிச்சு

சூடிக் கொண்டு போவோ'

(கவியூர் முரளி- தலித் சாகித்யம் – ப-317 )

கோத்திர பாடல்களில் உடல் தொடர்பான பங்கிடல் அல்லது மக்களின் பழக்கங்களைக் குறித்த பொதுமுறைகள் இந்த இரண்டு பாடல்களிலும் உள்ளன.இங்கு வேங்கைக்குப் பதிலாக வருகிற செண்பகப்பூ கேரளத்தின் பாரம்பரியமிக்க நறுமணமுள்ள பூவாகும். 'காய்ப்பறிக்குக' என்பது புணர்தல் என்ற சிருங்காரச்சுவையின் மாதிரியாக கோத்திரங்களின் அழகில் கட்டமைக்கப் பட்டுள்ளன. உள்ளுறை எனும் இவ் இயற்கை வெளிப்பாடு கோத்திர அழகின் உயிரும் ஆகும். மொட்டு, பூ என்பதின் மூலம் படைப்பின் உள்காட்சியை வெளிப் படுத்துவது பாடலின் அல்லது படைப்பின் உச்சமாகும் நீண்ட உரையாடல்களில் வெளிப்படாத ஒரு உயிர் இந்த பாடலில் அமைந்துள்ளமையைக் காண முடிகின்றது அத்துடன் சங்க இலக்கியங்கள் பதிவு செய்யாதப் பாடல்களை நாட்டுப்புறப் பாடல் கள் பதிவு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது

உள்பொருள் அமைந்த உள்ளுறை பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்களில் எண்ணிறந்தவை கள் உள்ளன இப்பாடல்பாடல்களில் உள்ளுறை ஒரு உத்தியாக செயல்படுவதைக் காண முடிகிறது.

## துணை நூல் பட்டியல்

⇒ அரவிந்தன். மூ. வை, தமிழக நாட்டுப் பாடல்கள், பாரி நிலையம் 59, பிராட்வே, சென்னை - 1 (1977)

⇒ அரங்க நலங்கிள்ளி டாக்டர், இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், வாணிதாசன் பதிப்பகம், D- 5, புதுச்சேரி பல்கலைக்கழக வளாகம், புதுச்சேரி, (1992)

⇒ தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, இலக்கிய வகைகள், மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை (2005)

⇒ நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 - B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை (2011)

⇒ மாணிக்கனார் வ.சுப தமிழ்த் காதல், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் 40, பிஞ்சால அப்பிரமணியம் தெரு, த.பெ.எண் - 10, தியாகராயநகர், சென்னை-17 (2009)

⇒ வானமாமலை.நா. (தொ.ஆ), தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூ செந்தரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. இப (1964)

⇒ கவியூர் முரளி, தலித் சாகித்யம், கரண்ட் புக்ஸ், கோட்டயம் (2001)

⇒ ராகவன் பய்ய நாடு, கேரளஃபோக்லோர் பெல்லோஸ் ஆஃப் மலபார் டிரஸ்ட், ஜோதிஷ் சதனம் பய்யனூர் (1997)